# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

سبحان الله وبحمده

هداية

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

## முதல் சிறப்பு

இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

“சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி”

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்

என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ அவரின் தவறுகள் அழிக்கப்பட்டுவிடுகின்றன. அவை கடலின் நுரை போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே!

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள்,புகாரி 6405

# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

## இரண்டாவது சிறப்பு

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி"

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்

அபூதர்(ரலி) அவர்கள் கூறியதாவது:

அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்களிடம் "(இறைவனைத் துதிக்கும்) சொற்களில் மிகவும் சிறந்தது எது?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு அவர்கள், "அல்லாஹ், "தன் வானவர்களுக்காக" அல்லது "தன் அடியார்களுக்காக" "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவன் தூயவன் எனத் துதிக்கிறேன்) என்பதையே தேர்ந்தெடுத்துள்ளான்" என்று பதிலளித்தார்கள்

அறிவிப்பாளர்: அபூதர்(ரலி) அவர்கள்,முஸ்லிம் 5277

# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

## மூன்றாவது சிறப்பு

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி"

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்

அபூதர்(ரலி) அவர்கள் கூறியதாவது:

(ஒரு முறை) அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் (என்னிடம்), "அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான வார்த்தையை நான் உமக்குத் தெரிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள்.

நான், "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான (அந்த) வார்த்தையை எனக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினேன். அதற்கு, "அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான வார்த்தை "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்) என்பதாகும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூதர்(ரலி) அவர்கள், முஸ்லிம் 5278

# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

## நான்காவது சிறப்பு

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ، سُبْحَانَ اللَّهِ الْعَظِيمِ

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி,
சுப்ஹானல்லாஹில் அழீ(ظ)ம்"

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிசெய்கிறேன்;
கண்ணியமிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன்.

இறைத்தூதர்(ﷺ) அவர்கள் கூறினார்கள்
இரண்டு வாக்கியங்கள் நாவுக்கு எளிதானவை ஆகும்.
(நன்மை, தீமை நிறுக்கப்படும்) தராசில் கனமானவை ஆகும்;
அளவற்ற அருளாளனின் பிரியத்திற்குரியவை ஆகும். அவை:

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, சுப்ஹானல்லாஹில் அழீம்

பொருள்: அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதி செய்கிறேன்,
கண்ணியமிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள்,புகாரி 6682

# சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி என்ற தஸ்பீஹின் ஐந்து சிறப்புகள்

## ஐந்தாவது சிறப்பு

سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி"

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கிறேன்

அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்:

யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை

"சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி"

(அல்லாஹ் தூயவன் எனப் போற்றிப் புகழ்கிறேன்)

என்று சொல்கிறாரோ

அவர் கொண்டு வந்த (நல்லறத்)தைவிடச் சிறந்ததை வேறெவரும்

மறுமை நாளில் கொண்டு வருவதில்லை,

அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது

அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள்,முஸ்லிம் 5222